மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.

2020 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 9ம் நாள் புதன் கிழமை

1873ம் ஆண்டு 11ஆவது ஏற்பாட்டின்படி திருமதி.கே.அனிதா, உதவியாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

OS.No. 426/2018 வா.சா. 2 என்பவரின் வாக்குமூலம்

பெயர் .. முருகேசன் வயது .. 64

த/பெ. .. காளிமுத்து சாதி ..

09.12.2020 - வா.சா.2 குறுக்கு விசாரணை.

நான் தற்போது காட்பாடி வட்டம், வண்டரந்தாங்கல் கிராமத்தில் வசித்து வருகிறேன். எத்தனை வருடமாக அங்கு வசித்து வருகிறேன் என்றால் பிறந்து வளர்ந்ததே அந்த இடம் தான். 1ம் வாதி நீலாவதியின் தங்கை கிருஷ்ணவேணி தான் நான் திருமணம் செய்து கொண்டேன் என்றால் சரிதான். எனக்கு எப்பொழுது திருமணம் ஆனது என்றால் 1978ஆம் வருடம் தேதி ஞாபகமில்லை. சகாதேவன் என்பவர் எப்போது இறந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. 3.9.1976ல் சகாதேவன் என்பவருக்கும் நீலாவதிக்கும் திருமணம் ஆனது என எனது முதல் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரிதான். எனது திருமண தேதி எனக்கு தெரியவில்லை. சகாதேவன் என்பவர் இறந்த தேதியும் எனக்கு தெரியவில்லை. நீலாவதி சகாதேவன் திருமண தேதி மட்டும் எனக்கு நினைவிருப்பதாக கூறுவது ஏற்கத்தக்கதல்ல என்றாலும் நீலாவதி கூறியதின் பேரில்தான் மேலும் திருமண தேதியை நான் கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் கூறுவதுபோல் நீலாவதிக்கும் சகாதேவனுக்கும் திருமணம் ஏதும் நடைபெறவில்லை என்றாலும் வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. என்னுடைய திருமணத்திற்கு முன்பாகவே வாதி நீலாவதியை எனக்கு தெரியும். நீலாவதி என்பவர் எப்படி எனக்கு தெரியும் என்றால் நீலாவதி திருமணத்திற்கு முன்பாக எங்களது கிராமத்தில் எனது வீட்டிற்கு அடுத்த மூன்றாவது வீட்டில் வசித்து வந்ததால் எனக்கு தெரியும். திருமணத்திற்கு பின்பு நீலாவதி சென்னைக்கு போய்விட்டார். நீலாவதியின் கணவர் சகாதேவன் சென்னையில் புரொபசராக வேலை செய்து வந்தார். சென்னையில் எந்த இடம் என்று எனக்கு தெரியாது. எந்த வருடம் புரொபசராக இருந்தார் என்றால் அவருக்கு திருமணம்

ஆவதற்கு முன்பாக புரொபசராக இருந்தார். திருமணத்திற்கு பின்பு எத்தனை வருடம் சென்னையில் புரொபசராக இருந்தார் என்றால் 1 வருடம் இருந்தார். 1977 வரை சென்னையில் புரொபசராக இருந்தார். அதன் பிறகு அவர் ஆந்திராவிற்கு சென்று விட்டார். அதன்பிறகு பெரியகரம் என்ற ஊரில் நீலாவதியை கொண்டு வந்து விட்டுவிட்டு அவர் ஆந்திரா சென்று விட்டார். பிறகு எப்போது நீலாவதியை ஆந்திராவிற்கு கூட்டிச்சென்றார் என்றால் அவர் நீலாவதியை ஆந்திராவிற்கு அழைத்து செல்லவே இல்லை. நாங்கள் நீலாவதியை ஏன் அழைத்து செல்லவில்லை என்று கேட்டோமா என்றால் கேட்டோம். அங்கே ரூம் செட்டாகாததால் கூட்டிச்செல்ல முடியவில்லை என்று கூறிவிட்டார். நீலாவதி ஆந்திராவிற்கு சென்று சகாதேவனை பார்த்து வருவாரா என்றால் இல்லை. சகாதேவன் வந்துவந்து பார்த்துவிட்டு செல்வார். இந்த வழக்கில் யார் யார் பிரதிவாதி என்று எனக்கு தெரியும். யார் யார் என்றால் மல்லிகா, தாமரைசெல்வன், கலையரசு மற்றும் இளவரசி. வேறு யாருக்கேனும் எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. சகாதேவன் எத்தனை வருடம் ஆந்திராவில் இருந்தார் என்றால் அவர் சாகும்வரை ஆந்திராவில் தான் இருந்தார். அவர் எங்கு வேலை செய்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் அவர் வண்டரன்தாங்கல் கிராமத்திற்கு என்னை பார்க்க வரும்போது நகரி புத்தூரில் உள்ள காலேஜில் புரொபசராக வேலை செய்வதாக கூறினார். எந்த காலேஜ் என்று எனக்கு தெரியாது. சகாதேவன் பணி ஓய்வு பெறுவதற்கு முன்பாகவே உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்தார். அவர் நகரி புத்தூரில் காலேஜுக்கு சொந்தமான ஆஸ்பத்திரியில் மருத்துவம் பார்த்து வந்தார். அதன் பிறகு நகரி புத்தூரில் தனியார் மருத்துவமனையில் மருத்துவம் பார்க்கும்போது இறந்துவிட்டார். அவர் இறக்கும்பொழுது பணியில் இருந்தார். அவர் மருத்துவனையில் இருந்தபோது நான் சென்று பார்த்தேனா என்றால் பார்த்தேன். அப்போது அவருடன் யார் இருந்தார்கள் என்றால் நீலாவதி இருந்தார். நீலாவதி ஆந்திராவிற்கு செல்லவே இல்லை என்று கூறிவிட்டு இப்போது நீலாவதி அங்கு இருந்தார் என்று எவ்வாறு கூறினேன் என்றால் நான் சென்ற போது அவர் அங்கு இருந்தார். சகாதேவன் இறப்பிற்கு நான் சென்றேன் என்றால் சரிதான். அவர் இறுதி சடங்கு நகரி புத்தூரில் நடைபெற்றது. இறந்த பிரேதத்தை நாங்கள் ஏன் பெரியகரம் கிராமத்திற்கு கொண்டு

வரவில்லை என்றால் மருத்துவர் பிரேதம் எடுத்துசெல்லும் நிலையில் இல்லை என்று கூறியதால் அங்கேயே அடக்கம் செய்து விட்டோம். இறந்த சகாதேவனுக்கு சடங்குகள் யார் செய்தார்கள் என்றால் நீலாவதிதான் முழுசடங்கையும் செய்தார். பிரேதத்தை புதைத்து விட்டார்கள். அங்கு சுடுகாட்டில் செய்ய வேண்டிய சடங்குகளையும் நீலாவதி தான் செய்தாரா என்றால் நீலாவதிதான் செய்தார். சுடுகாட்டில் பெரியகரம் கிராமத்தை சேர்ந்தவர்களை தவிர வேறு யாரும் இல்லை என்றால் வேறு யாரும் இல்லை. மல்லிகா, தாமரைசெல்வன் ஆகியோர் அங்கு இருந்தார்களா என்றால் அவர்கள் அங்கு இல்லை. நாங்களே புதைத்து அடக்கம் செய்து விட்டோம் என்றால் சரிதான். மல்லிகா, தாமரைசெல்வன், கலையரசு, இளவரசி ஆகியோர் சகாதேவனின் வாரிசு என மோசடியாக வாரிசு சான்றிதழ் பெற்றுள்ளார்கள். அதனால்தான் இந்த வழக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சகாதேவனுக்கு 1ம் பிரதிவாதியான மல்லிகாயுடன்தான் திருமணம் நடைபெற்றது என்று சொன்னால் சரியல்ல. சகாதேவனுக்கும் 1ம் பிரதிவாதிக்கும் இறந்த சட்டப்படியான வாரிசுகள்தான் 2 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் என்றால் சரியல்ல. சகாதேவன் இறந்தபின்பு இறுதிசடங்கு அனைத்தும் 1 முதல் 4 பிரதிவாதிகள் தான் செய்தார்கள் என்றால் சரியல்ல. வழக்கிற்காக நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் வாதி நீலாவதி சகாதேவனின் உடன் பிறந்த சகோதரியின் மகள் என்றால் சரிதான். கைக்குழநச்தையுடன் இருந்த நீலாவதியை சகாதேவன் பெரியகரத்தில் உள்ள தன்னுடைய நிலத்தை பார்த்துக்கொண்டிருந்ததாக பெரியகரத்தில் கொண்டுவந்து வைத்திருந்ததை வாதி தனது சாதகமாக பயன்படுத்திக்கொண்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும் நான் வாதியின் தங்கை கணவர் என்பதால் வாதிக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. முதலாம் பிரதிவாதிதான் இறந்த சகாதேவனின் உண்மையான மனைவி என்றாலும் சகாதேவன் உயிருடன் உள்ள காலம் வரை எந்த நடவடிக்கையும் எடுக்காமல் சகாதேவன் இறந்த பின்பு அவரது சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு

வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அதற்கு நான் உடந்தையாக உள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

Sd/-D.Ravi, 9.12.20.
District Munsif,
Polur.